1528/23

1225/2023

Estt

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6, அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : மரு.அ. சண்முகக்கனி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,

ந.க.எண் 67575/நிபி8/1/2022 நாள்: 22.05.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.எஸ்.பெருமாள், இளநிலை உதவியாளர், அரசு தலைமை மருத்துவமனை, வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம் – (த/பெ. (லேட்) திரு.எம்.சுப்ரமணி, ஓட்டுநர், அரசு மருத்துவமனை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலார் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.50420/நிபி8/1/2021, நாள் 01.11.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.65636/நிபி2/2/2021, நாள் 12.11.2021.
5) இராணிப்பேட்டை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக ந.க.எண்.2615/நி1/2022, நாள் 03.11.2022 மற்றும் 09.02.2023.
6) மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்

------

ஆணை :

வேலூர் மாவட்டம், அரக்கோணம், அரசு மருத்துவமனையில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 29.04.2008 அன்று இயற்கையெய்திய திரு.எம்.சுப்ரமணி என்பவர் 10.06.1988 அன்று பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 09.06.1990 பிற்பகல் அன்று தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 01.04.1955, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.03.2013 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.எஸ்.பெருமாள் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

HOSPITAL SUPERINTENDENT
Govt. Head Quarters Hospital
Walajapet, Ranipet Dist - 632 513

HOSPITAL SUPERINTENDENT
Govt. Head Quarters Hospital
Walajapet, Ranipet Dist - 632 513

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, வேலூர் மாவட்டம், அரக்கோணம், அரசு மருத்துவமனையில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 29.04.2008 அன்று இயற்கையெய்திய திரு.எம்.சுப்ரமணி என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.எஸ்.பெருமாள் (பிறந்த தேதி 05.06.1982) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் 22.11.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.பெருமாள் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 22.11.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

அ. சண்முகக்கனி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.எஸ்.பெருமாள்,
இளநிலை உதவியாளர்,
அரசு தலைமை மருத்துவமனை, வாலாஜா,
இராணிப்பேட்டை மாவட்டம்.
- இராணிப்பேட்டை நலப்பணிகள் இணை இயக்குநர், மூலமாக.

நகல்
1) நலப்பணிகள் இணை இயக்குநர், இராணிப்பேட்டை.
2) நலப்பணிகள் இணை இயக்குநர் வேலூர்.
3) நிர்வாகப்பிரிவு - 2.
4) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)